[1974 சனவரி 23

மதுரையில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

* 116 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூ. 6 கோடி செலவில் சேரி ஒழிப்புத் திட்டம் ஒன்றினை மதுரை மாநகராட்சி தயாரித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மாதிரி ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கீம் சென்னையிலே இருக்கிறது. அதற்கு அடுத்த பெரிய கார்ப்பரேஷனாக இருக்கும் மதுரையிலேயும் இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டுவரும் ஆலோசனை அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சென்னையிலே குடிசை மாற்று வாரியம் செய்யும் வேலைகளை வீட்டு வசதி வாரியம் மாவட்ட தலைநகரங்களிலே செய்து வருகிறது. அந்த அடிப்படையில் 65.82 லட்சத்தில் இப்பொழுது மதுரைக்காக திட்டங்கள் போடப்பட்டு வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

Supply of diesel oil

* 117 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to increase the supply of diesel oil in this State ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்சமயம் டீசல் எண்ணெய் கிடைப்பதில் தட்டுப்பாடு எதுவும் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, டீசல் சப்ளையை அதிகரிக்காவிட்டாலும் அது குறையாமல் இருக்கவாவது மத்திய சர்க்கார் உறுதி கொடுத்திருக்கிறார்களா ? அல்லது இந்த சப்ளை குறையாமல் இருக்க சர்க்கார் ரேஷன் முறையைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்திருக்கிறதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.